உ
முருகா

# சங்கர மடம் விஜயேந்திரர் பொது மேடையில் தமிழ்த்தாயை அவமதித்த செயலுக்குக் கழுவாயாக (பரிகாரமாக)

# சிறப்புத் தமிழ்த்தாய் வேள்வி

இடம் : **மங்கையர்க்கரசியார் ஆலயப்பணிக் குழு**
சிவசத்தி விநாயகர் கோயில் குறுக்குத் தெரு, (பத்ராகாளி கோவில் எதிரில்) 4வது தெரு,
கிழக்குபானு நகர், அம்பத்தூர், சென்னை – 600 053.
நாள் : 4.2.2018 ஞாயிறு மாலை 3.00 மணி முதல்

வையம் ஈன்றதொல் மக்கள் உளத்தினைக்
கையி னால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பசுந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவோம் !

தகைசால் தெய்வத்தமிழ் ஆர்வலர்களே !

சென்ற 24.01.2018 அன்று தமிழ் – சமஸ்கிருத அகராதி என்ற நூலை வெளியிடும் ஒரு பொது நிகழ்ச்சியில் அதில் கலந்து கொண்ட தமிழக ஆளுநர் எழுந்து நின்று மரியாதை செய்தபோதும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டபோது தான் எழுந்திராமல் கண்ணை மூடி அமர்ந்து தமிழ்த்தாயை அவமதிப்பு செய்திருக்கிறார் சங்கர மட இளைய துறவி விஜயேந்திரர்.

இது உலக முழுவதும் உள்ள தமிழர்களின் நெஞ்சில் ஈட்டியாகப் பாய்ந்து புண்படச் செய்துள்ளது. யார் பொறுப்பார் இந்த அநியாயத்தை !

இக்கொடுங்கேட்டிற்குக் கழுவாயாக (பரிகாரமாக) அடியிற்கண்ட தமிழ் அமைப்புகள் ஒரு சிறப்புத் தமிழ்த்தாய் வேள்வி ஆற்றி தமிழ்த்தாயின் பொற்பு காத்துப் பொலிவு தூக்க முடிவு செய்துள்ளன.

வேள்வியை செந்தமிழ் வேள்விச்சதுரர்
முதுமுனைவர் **மு.பெ.சத்தியவேல் முருகனார்** அவர்களின்

குழுவினர் தமிழ்மாமறை மந்திரங்களால் ஆற்றிட, அதைத் தொடர்ந்து வீறு தமிழ் உரைகள் அமைய வகுக்கப் பெற்றுள்ளன.

**அனைவரும் வருக ! அருட்டமிழ் எழுச்சி பெறுக !**



இவண்
செந்தமிழ் ஆகமஅந்தணர் சிறப்பவை
தெய்வத்தமிழ் அறக்கட்டளை
தமிழ்த்தாய் மங்கையர்க்கரசியார் ஆலயப்பணிக் குழு

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| பிற்பகல் 3.00 மணி<br>திருமுறை இசை | : | **மங்கையர்க்கரசியார் ஆலயப்பணிக் குழு** |
| பிற்பகல் 3.30 மணி | : | சிறப்புத் தமிழ்த்தாய் வேள்வி தொடக்கம்<br>வேள்வி ஆற்றுவோர் :<br>செந்தமிழ் வேள்விச்சதுரர் முதுமுனைவர்<br>**மு.பெ.சத்தியவேல் முருகனார்** குழு |

## வீறு தமிழ்ப் பேருரை அரங்கம்

| | | |
|---|---|---|
| மாலை 6.00 மணி<br>வரவேற்புரை | : | செந்தமிழ்த் திரு. **C. காஞ்சிராஜன்** |
| தமிழ்த்தாய் வணக்கம்,<br>முத்தமிழ் முத்தாய்ப்புப்பண்<br>குறுந்தகடு வெளியீடு | : | செந்தமிழ் ஆகம அந்தணர்<br>திரு. **எம்.பி. நடராசன்** D.S.P. (ஓய்வு) |
| முதல் குறுந்தகடு பெறுபவர் | : | திரு. **C. காஞ்சிராஜன்** |
| எழுச்சித் தலைமை உரை | : | ஆகமத் தமிழறிஞர் முதுமுனைவர்<br>**மு.பெ.சத்தியவேல் முருகனார்** |
| இரவு 8.00 மணி | : | முத்தமிழ் முத்தாய்ப்புப் பண் |

## நிறைவு